**சுருக்கம்**

நகராட்சி மன்றங்கள் – திருப்பூர் மாவட்டம் – காங்கேயம், திருமுருகன்பூண்டி, நாகப்பட்டிணம் மாவட்டம் – வேதாரண்யம், இராமநாதபுரம் மாவட்டம் – இராமேஸ்வரம், அரியலூர் மாவட்டம் – ஜெயங்கொண்டம் ஆகிய இரண்டாம் நிலை நகராட்சி மன்றங்களை முதல் நிலை நகராட்சி மன்றங்களாகவும்; கள்ளக்குறிச்சி மாவட்டம் – கள்ளக்குறிச்சி, திருப்பூர் மாவட்டம் – தாராபுரம், திருவாரூர் மாவட்டம் – திருவாரூர், தேனி மாவட்டம் – போடிநாயக்கனூர், தென்காசி மாவட்டம் – தென்காசி ஆகிய முதல் நிலை நகராட்சி மன்றங்களை தேர்வு நிலை நகராட்சி மன்றங்களாகவும், விழுப்புரம் மாவட்டம் – விழுப்புரம், மயிலாடுதுறை மாவட்டம் – மயிலாடுதுறை, தேனி மாவட்டம் – தேனி–அல்லிநகரம் ஆகிய தேர்வு நிலை நகராட்சி மன்றங்களை சிறப்பு நிலை நகராட்சி மன்றங்களாகவும் மற்றும் பெரம்பலூர் மாவட்டம் – பெரம்பலூர் இரண்டாம் நிலை நகராட்சி மன்றத்தினை தேர்வு நிலை நகராட்சி மன்றமாகவும் தரம் உயர்த்துதல் – ஆணைகள் – வெளியிடப்படுகிறது.

---

**நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை**

**அரசாணை (நிலை) எண்.57** — **நாள்: 02.05.2023**

**திருவள்ளுவர் ஆண்டு 2054**
**சோபகிருது, சித்திரை 19**
**படிக்கப்பட்டன:**

(1) அரசாணை (நிலை) எண்.45, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை, நாள் 12.04.2023.

(2) நகராட்சி நிருவாக இயக்குநரின் கடிதம் ந.க.எண்.10910/2023/எம்.ஏ.2, நாள் 18.04.2023.

******

**ஆணை:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் அவர்கள் சட்டப்பேரவையில், 2023–24 ஆம் ஆண்டிற்கான இத்துறையின் மானியக் கோரிக்கையின் போது பிறவற்றுடன்,

(i) காங்கேயம், திருமுருகன்பூண்டி, வேதாரண்யம், இராமேஸ்வரம், ஜெயங்கொண்டம் ஆகிய இரண்டாம் நிலை நகராட்சிகளை முதல் நிலை நகராட்சிகளாகவும்;

(ii) கள்ளக்குறிச்சி, தாராபுரம், திருவாரூர், போடிநாயக்கனூர், தென்காசி ஆகிய முதல் நிலை நகராட்சிகளை தேர்வு நிலை நகராட்சிகளாகவும்;

(iii) விழுப்புரம், மயிலாடுதுறை, தேனி–அல்லிநகரம் ஆகிய தேர்வு நிலை நகராட்சிகளை சிறப்பு நிலை நகராட்சிகளாகவும்;

(iv) பெரம்பலூர் இரண்டாம் நிலை நகராட்சியை தேர்வு நிலை நகராட்சியாகவும் தரம் உயர்த்தப்படும் என அறிவித்துள்ளார்கள்.

2. 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் (4)–ஆம் உட்பிரிவின்படி, செம்மையான நிருவாகத்திற்கென நகராட்சி மன்றங்கள், (Municipal Councils) வகுத்துரைக்கப்படக்கூடிய வரையறைகளுக்கேற்ப பல்வேறு நிலைகளாக வகைப்படுத்தப்படலாம். மேலும், 2023 ஆம் ஆண்டு நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள் விதிகளின் விதி 3 (1) (b)–ன்படி, முந்தைய மூன்று ஆண்டுகால சராசரி வருவாயின் அடிப்படையில் பின்வரும் வரையறைகளின்படி நகராட்சி மன்றங்கள் வகைப்படுத்தப்படலாம் (classify) என குறித்துரைக்கப்பட்டுள்ளது:

| வ. எண். | நிலை | ஆண்டு வருமானம் (ரூ.கோடியில்) |
|---|---|---|
| 1. | சிறப்பு நிலை | ரூபாய் 15 கோடிக்கு மேல் |
| 2. | தேர்வு நிலை | ரூபாய் 9 கோடிக்கு மேல் எனினும் ரூபாய் 15 கோடிக்கு மிகாமல் |
| 3. | முதல் நிலை | ரூபாய் 6 கோடிக்கு மேல் எனினும் ரூபாய் 9 கோடிக்கு மிகாமல் |
| 4. | இரண்டாம் நிலை | ரூபாய் 6 கோடிக்கு மிகாமல் |

3. நகராட்சி நிருவாக இயக்குநர் மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட தமது செயற்குறிப்பில், திருப்பூர் மாவட்டம் – காங்கேயம், திருமுருகன்பூண்டி, நாகப்பட்டிணம் மாவட்டம் – வேதாரண்யம், இராமநாதபுரம் மாவட்டம் – இராமேஸ்வரம், அரியலூர் மாவட்டம் – ஜெயங்கொண்டம், ஆகிய இரண்டாம் நிலை நகராட்சி மன்றங்களை முதல் நிலை நகராட்சி மன்றங்களாகவும், கள்ளக்குறிச்சி மாவட்டம் – கள்ளக்குறிச்சி, திருப்பூர் மாவட்டம் – தாராபுரம், திருவாரூர் மாவட்டம் – திருவாரூர், தேனி மாவட்டம் – போடிநாயக்கனூர், தென்காசி மாவட்டம் – தென்காசி ஆகிய முதல் நிலை நகராட்சி மன்றங்களை தேர்வு நிலை நகராட்சி மன்றங்களாகவும், விழுப்புரம் மாவட்டம் – விழுப்புரம், மயிலாடுதுறை மாவட்டம் – மயிலாடுதுறை, தேனி மாவட்டம் – தேனி–அல்லிநகரம் ஆகிய தேர்வு நிலை நகராட்சி மன்றங்களை சிறப்பு நிலை நகராட்சி மன்றங்களாகவும், பெரம்பலூர் மாவட்டம் – பெரம்பலூர் இரண்டாம் நிலை நகராட்சி மன்றத்தை தேர்வு நிலை நகராட்சி மன்றங்களாகவும், தொடர்புடைய நகராட்சி மன்றங்களின் தணிக்கை செய்யப்பட்ட வருமான விவரங்களின் அடிப்படையிலும், தீர்மானத்தின் அடிப்படையிலும், அந்நகராட்சிகளின் நிலையை மேலே குறிப்பிட்டவாறு தரம் உயர்த்தலாம் என தொடர்புடைய நகராட்சி மன்றங்களின் ஆணையர்கள் பரிந்துரை செய்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார். மேலும், இச்செயற்குறிப்புகளை தொடர்புடைய நகராட்சி நிருவாக மண்டல இயக்குநர்கள் பரிந்துரைத்துள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

4. மேலும், நகராட்சி நிருவாக இயக்குநர், தாராபுரம், திருவாரூர், போடிநாயக்கனூர், தென்காசி ஆகிய நகராட்சி மன்றங்கள் சிறப்பு நிலைக்கான ஆண்டு சராசரி வருமானத்தை கொண்டிருப்பினும், இந்நகராட்சி மன்றங்களின் ஊதியச் செலவினம் மற்றும் பராமரிப்பு செலவுகள் ஆகியவற்றை கருத்திற்கொண்டு இந்நகராட்சி மன்றங்களை தேர்வு நிலை நகராட்சி மன்றங்களாகவும் மற்றும் திருமுருகன்பூண்டி, ஜெயங்கொண்டம், இராமேஸ்வரம் ஆகிய நகராட்சி மன்றங்கள் தேர்வு நிலைக்கான ஆண்டு சராசரி வருமானத்தை கொண்டிருப்பினும் மேற்குறிப்பிடப்பட்ட காரணங்களின் அடிப்படையில் இந்நகராட்சி மன்றங்களை முதல் நிலை நகராட்சி மன்றங்களாகவும் தரம் உயர்த்தலாம் என பரிந்துரைத்துள்ளார்.

5. மாண்புமிகு நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பு மற்றும் 2023 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள் விதிகளின் விதி 3 (1) (b)–ன்படி, திருப்பூர் மாவட்டம் – காங்கேயம், திருமுருகன்பூண்டி, நாகப்பட்டிணம் மாவட்டம் – வேதாரண்யம், இராமநாதபுரம் மாவட்டம் – இராமேஸ்வரம், அரியலூர் மாவட்டம் – ஜெயங்கொண்டம், கள்ளக்குறிச்சி மாவட்டம் – கள்ளக்குறிச்சி, திருப்பூர் மாவட்டம் – தாராபுரம், திருவாரூர் மாவட்டம் – திருவாரூர், தேனி மாவட்டம் – போடிநாயக்கனூர், தென்காசி மாவட்டம் – தென்காசி, விழுப்புரம் மாவட்டம் – விழுப்புரம், மயிலாடுதுறை மாவட்டம் – மயிலாடுதுறை, தேனி மாவட்டம் – தேனி–அல்லிநகரம், பெரம்பலூர் மாவட்டம் – பெரம்பலூர் ஆகிய நகராட்சி மன்றங்களின் நிலையை பின்வருமாறு உயர்த்தலாம் என நகராட்சி நிருவாக இயக்குநர் அரசுக்கு பரிந்துரை செய்துள்ளார்.

| வ. எண். | நகராட்சி மன்றங்களின் பெயர் | தற்போதைய நிலை | தரம் உயர்த்தப்படும் நிலை |
|---|---|---|---|
| 1. | **காங்கேயம்** | இரண்டாம் நிலை | **முதல் நிலை** |
| 2. | **திருமுருகன்பூண்டி** | இரண்டாம் நிலை | **முதல் நிலை** |
| 3. | **வேதாரண்யம்** | இரண்டாம் நிலை | **முதல் நிலை** |
| 4. | **இராமேஸ்வரம்** | இரண்டாம் நிலை | **முதல் நிலை** |
| 5. | **ஜெயங்கொண்டம்** | இரண்டாம் நிலை | **முதல் நிலை** |
| 6. | **கள்ளக்குறிச்சி** | முதல் நிலை | **தேர்வு நிலை** |
| 7. | **தாராபுரம்** | முதல் நிலை | **தேர்வு நிலை** |
| 8. | **திருவாரூர்** | முதல் நிலை | **தேர்வு நிலை** |
| 9. | **போடிநாயக்கனூர்** | முதல் நிலை | **தேர்வு நிலை** |
| 10. | **தென்காசி** | முதல் நிலை | **தேர்வு நிலை** |
| 11. | **விழுப்புரம்** | தேர்வு நிலை | **சிறப்பு நிலை** |
| 12. | **மயிலாடுதுறை** | தேர்வு நிலை | **சிறப்பு நிலை** |
| 13. | **தேனி–அல்லிநகரம்** | தேர்வு நிலை | **சிறப்பு நிலை** |
| 14. | **பெரம்பலூர்** | இரண்டாம் நிலை | **தேர்வு நிலை** |

6. அரசு, நகராட்சி நிருவாக இயக்குநரின் செயற்குறிப்பை கவனமான பரிசீலனைக்குப் பின்னர் ஏற்று, 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள் சட்டத்தின் 3 ஆம்பிரிவின் (4) ஆம் உட்பிரிவு மற்றும் 2023 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள் விதிகளின் விதி 3 (1) (b) ஆகியவற்றின் கீழ்,–

(i) காங்கேயம், திருமுருகன்பூண்டி, வேதாரண்யம், இராமேஸ்வரம், ஜெயங்கொண்டம் ஆகிய இரண்டாம் நிலை நகராட்சி மன்றங்களை முதல் நிலை நகராட்சி மன்றங்களாகவும்;

(ii) கள்ளக்குறிச்சி, தாராபுரம், திருவாரூர், போடிநாயக்கனூர், தென்காசி ஆகிய முதல் நிலை நகராட்சி மன்றங்களை தேர்வு நிலை நகராட்சி மன்றங்களாகவும்;

(iii) விழுப்புரம், மயிலாடுதுறை, தேனி–அல்லிநகரம் ஆகிய தேர்வு நிலை நகராட்சி மன்றங்களை சிறப்பு நிலை நகராட்சி மன்றங்களாகவும்; மற்றும்

(iv) பெரம்பலூர் இரண்டாம் நிலை நகராட்சி மன்றத்தை தேர்வு நிலை நகராட்சி மன்றமாகவும், வகைப்பாடு (clssify) செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

7. இதனடிப்படையில் 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவு மற்றும் 2023 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள் விதிகளின் விதி 3 (1) (b) ஆகியவற்றின் கீழ் இவ்வாணையுடன் இணைக்கப்பட்டவாறான அறிவிக்கை 02.05.2023 ஆம் தேதியிட்ட *தமிழ்நாடு அரசின் சிறப்பிதழில்* வெளியிடப்படும்.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**சிவ் தாஸ் மீனா**
**அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.**

**பெறுநர்:**
பணிமேலாளர், அரசுமையஅச்சகம், சென்னை – 600 001. (இவ்வரசாணையுடன் இணைக்கப்பட்ட அறிவிக்கையை தமிழ்நாடு அரசின் சிறப்பிதழில் வெளியிடவும் மற்றும் அதன் 50 பிரதிகளை அரசுக்கு அனுப்பிவைக்கவும்)
நகராட்சி நிருவாக இயக்குநர், சென்னை – 600 028.
தொடர்புடைய மாவட்ட ஆட்சியர்கள்.
தொடர்புடைய மண்டல நகராட்சி நிருவாக இயக்குநர்கள்.
தொடர்புடைய நகராட்சி ஆணையர்கள்.
**நகல்:**
மாண்புமிகு நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை – 600 009.
சட்டத்துறை, சென்னை – 600 009.
நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.ப.1 மற்றும் அ.ந.2) துறை, சென்னை – 600 009.

**//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//**

**பிரிவு அலுவலர்.**

## APPENDIX.

## NOTIFICATION.

In exercise of the powers conferred by sub-section (4) of section 3 of the Tamil Nadu Urban Local Bodies Act, 1998 (Tamil Nadu Act 9 of 1999), read with clause (b) of sub-rule (1) of rule 3 of the Tamil Nadu Urban Local Bodies Rules, 2023, the Governor of Tamil Nadu hereby classifies each of the Municipal Council specified in column (2) of the Table below into that of the Grade specified in the corresponding entry in column (4) thereof:—

### THE TABLE.

| Sl. No. | Name of the Municipal Councils | Name of the district | Grade |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1. | Kangeyam | Tiruppur | First grade |
| 2. | Thirumuruganpoondi | Tiruppur | First grade |
| 3. | Vedharanyam | Nagappattinam | First grade |
| 4. | Rameswaram | Ramanathapuram | First grade |
| 5. | Jeyamkondam | Ariyalur | First grade |
| 6. | Kallakurichi | Kallakurichi | Selection grade |
| 7. | Dharapuram | Tiruppur | Selection grade |
| 8. | Tiruvarur | Tiruvarur | Selection grade |
| 9. | Bodinayakanur | Theni | Selection grade |
| 10. | Tenkasi | Tenkasi | Selection grade |
| 11. | Perambalur | Perambalur | Selection grade |
| 12. | Villupuram | Villupuram | Special grade |
| 13. | Mayiladuthurai | Mayiladuthurai | Special grade |
| 14. | Theni-Allinagaram | Theni | Special grade |

**SHIV DAS MEENA**
**ADDITIONAL CHIEF SECRETARY TO GOVERNMENT**

**//True Copy//**

2023

**Section Officer.**